[1979 பிப்ரவரி 20

தானிப்பாடி கிராம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம்.

வினா எண் 105—**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கம் வட்டம், H.H. 504 எண்ணுள்ள தானிப்பாடி கிராம கூட்டுறவு விவசாய கடன் சங்கத்தின் பணியாளர் (காரியதரிசி) சங்கத்தின் ரிகார்டுகளுடன் தலைமறைவாய் விட்டார் என்று சம்பந்தபட்ட சங்கத்தின் தலைவர் கொடுத்த புகார் மனுவின் மீது எடுத்த நடவடிக்க என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

ரிக்கார்டுகளுடன் சங்க காரியதரிசி தலைமறைவாகிவிட்டார் என்று சங்கத் தலைவர் புகார் கொடுக்கவில்லை. சங்கத்திற்கு சேரவேண்டிய ரூ. 600 ஐ கொடுக்கவில்லை என்று மட்டுமே புகார் செய்தார்.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சங்கத் தலைவர் புகார் கொடுக்கவில்லை என்று கூறி கையாடல் செய்திருக்கிறார் என்று மட்டும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி கையாடல் செய்தபோது ரிக்கார்டுகளை எடுத்துக்கொண்டு போய்விட்டார் என்று நானே புகார் கோடுத்திருக்கிறேன். எந்த காரணத்திற்காக கையாடல் செய்தார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கையாடல் செய்திருப்பதாக புகார் கூறியிருக்கிறார்கள். ஆனால் விசாரணை செய்த நேரத்தில், காவல் துறையினர் விசாரணை செய்தபோது யார், யார் அந்த புகார் செய்தார்களோ அவர்கள் வந்து தகவல் சொல்லவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, தகவல் சொல்லவில்லை என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். காவல் துறையினர் விசாரணை செய்தபோது புகார் கொடுத்தவர்களுக்கு தகவல் கொடுத்திருந்தால் அந்த விசாரணையில் கலந்து கொண்டு இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துத கொள்வதோடு விசாரணை நடைபெறுவது பற்றி புகார் கொடுத்க்வர்களுக்கு ஏன் தகவல் தெரிவிக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறென்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : உறுப்பினர் அவர்களின் தகவல் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்க முயலுகிறேன்.